## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

## தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(11.10.2023 முதல் 15.10.2023)

அறிக்கைஎண்: 81/2023 தேதி : 10.10.2023

### தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (11.10.2023 முதல் 15.10.2023).

| கடந்தவாரவானிலை (06.10.2023 முதல் 09.10.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (11.10.2023 முதல் 15.10.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 06/10 | நாள்-2 07/10 | நாள்-3 08/10 | நாள்-4 09/10 | தேதி | நாள்-1 11/10 | நாள்-2 12/10 | நாள்-3 13/10 | நாள்-4 14/10 | நாள்-5 15/10 |
| 0.3 | 0.2 | 0.0 | 1.7 | மழை (மி.மீ.) | 10 | 14 | 5 | 1 | 0 |
| 37 | 36 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 35 | 34 | 34 |
| 27 | 27 | 27 | 28 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 27 | 26 | 26 |
| 5 | 5 | 5 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 4 | 4 |
| 72-67 | 74-67 | 74-65 | 71-66 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 72-66 | 72-66 | 72-66 | 70-64 | 70-64 |
| 4 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 4 | 4 | 5 | 5 |
| மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு |

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 11.10.2023 முதல் 14.10.2023 லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 – 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 72 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 64 - 66 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 - 5 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு வட மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| | | வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும் |
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவும் அதிக வெப்பநிலையின் காரணமாக, நடவு வயலில்லுள்ள தண்ணீர் அதிக வெப்பமடைந்து இளம் நாற்றுகளுக்கு வெப்ப பாதிப்பை உண்டாக்கும். இதை தடுக்க வயலில் அதிக அளவு தண்ணீர் தேங்காமல், காய்ச்சலும் பாய்ச்சலுமாக வைத்திருக்கவும் |
| கால்நடைகள் | மாடு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும். |

## குறுஞ்செய்தி

வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும்.

**இயக்குநர்**